# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

**Tamil Study Centre - Mount Druitt**

*Mobile: 0449 892 066*

*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*

## பேச்சுப்போட்டி– 2018

## ஆண்டு 4

அனைவருக்கும் வணக்கம்!

## அன்பு

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்கை

பண்பும் பயனும் அது" என்பது வள்ளுவர் வாக்கு.

இல்லறம் நல்லறமாக அன்பு இன்றியமையாதது. அன்பினால் கிடைக்கக்கூடிய பலன்கள் எண்ணிலடங்கா. நமது ஆற்றல், மன வலிமை, உடல் வலிமை, அறிவாக்கம் இவற்றுக்கு உறுதுணையாக நிற்பது அன்பே.

அன்பினால் தீய குணங்களான கோபம், பொறாமை, அகந்தை ஆகியவை அழிக்கப்படுகின்றன. அன்பு என்ற மூன்றெழுத்தினால் பாசம், பரிவு, உண்மை, பண்பு, கடமை ஆகிய நற்குணங்கள் வெளிப்படுகின்றன.

"அன்பே பிரதானம் அதுவே வெகுமானம்" அன்பினால் சாதிக்க முடியாதது இவ்வுலகில் எதுவுமில்லை என்று கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் கஜந்தி சதீஸ்கரன்